சுற்றுநிருபம் **14/2009**

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு
வட மாகாணம்
29.06.2009

வட மாகாணத்திலுள்ள சகல
கூட்டுறவு நிறுவனங்களின் தலைவர்களுக்கும்

ஆளணி அங்கீகாரம் பெறப்படாது இளைப்பாறிய பணியாளர்களுக்கு கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் 31/99, 66/2006 ம் இலக்க சுற்றுநிருபங்களை நடைமுறைப்படுத்துதல்

மேற்படி சுற்றுநிருபங்கள் நடைமுறைக்கு வந்தபின்னர் பல்வேறு சூழ்நிலைகளால் ஆளணி அங்கீகாரம் பெறப்படாமல் பலர் அச்சுற்றுநிருபங்கள் நடைமுறைப்படுத்தப்படாத நிலையில் இளைப்பாறியுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

எனவே 2000.01.01 – 2006.12.31 வரையான காலப்பகுதியில் 31/99 சுற்றுநிருபம் நடைமுறைப்படுத்தப்பட்ட காலப்பகுதியில் ஆளணி அங்கீகாரம் பெறப்படாது இளைப்பாறியவர்களுக்கு 31/99 சுற்றுநிருபத்தின் கீழும் 2007.01.01 இன் பின் கடமையாற்றி 66/2006 சுற்றுநிருபம் நடைமுறைப்படுத்தப்பட்ட காலப்பகுதியில் ஆளணி அங்கீகாரம் பெறப்படாது இளைப்பாறியவர்களுக்கு 66/2006 சுற்றுநிருபத்தின் கீழும் பணிக்கொடைக்கான நன்மைகளை பெற்றுக்கொடுக்க கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

ஆகவே மேற்படி சுற்றுநிருபங்களுக்கமைய ஆளணி அங்கீகாரம் பெறப்படாது கடமையாற்றி குறித்த சுற்று நிருபங்கள் நடைமுறைப்படுத்தப்படாமல் இளைப்பாறியவர்களை இனம்கண்டு அவர்களுக்கு மேற்படி சுற்று நிருபங்களின் பிரகாரம் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் தழுவு ஆளணி அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

இதற்காக கீழ்வரும் விபரங்கள் அடங்கிய விண்ணப்பங்களைப் பட்டியல் படுத்தி ஆணைக்குழுவிற்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

1. பணியாளரின் பெயர்
2. இறுதியாக கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறப்பட்ட பதவியும் எந்த சுற்றுநிருபத்தின் கீழானது என்பது பற்றிய விபரமும்
3. இறுதியாகப் பெற்ற சம்பளப்படிநிலை
4. ஓய்வுபெற்ற திகதி

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் முன்னங்கீகாரம் கிடைக்கப்பெற்றதும் குறிக்கப்பட்ட சுற்றுநிருபத்தின் அடிப்படையில் சம்பள மாற்றியமைப்பினை மேற்கொண்டு பொருத்தமான சம்பளப்படிநிலையில் அமர்த்த வேண்டும். பின்பு இச்சம்பளப் படிநிலையை இறுதியாகப் பெற்ற சம்பளப்படிநிலையாகக் கொண்டு பணிக்கொடையினை கணிப்பிட்டு முன்னர் செலுத்திய பணிக்கொடையினை கழித்துக்கொண்டு மிகுதியினை வழங்க வேண்டும்.

இவ்விசேட ஏற்பாடானது பணிக்கொடைக் கணிப்பிற்கு மட்டுமே பொருத்தமாக அமைவதுடன் நிலுவைச் சம்பளங்கள் பெற உரித்துடையதன்று.

2009.06.25 ந் திகதிய ஆணைக்குழு கட்டளைப்படி.

பொ.வாகீசன்
செயலாளர்
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு
வட மாகாணம்

P. VAGESHAN
Secretary
Co-operative Employees Commission
Northern Province

பிரதி :

01. கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், பதிவாளரும், வட மாகாணம்
02. வட மாகாணத்திலுள்ள சகல கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களுக்கும்.